# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, KRISHNAGIRI

**Mcop.No. 949 /2018**
Deposition of PW2 Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade-I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1969.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சலபதி | Father's Name | : | திரு.வெங்கடபதி |
| Village | : | | Taluk | : | |
| calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் எனது முதல் விசாரணை குறித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . அதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

| | | |
|---|---|---|
| பிரேதபரிசோதனை அறிக்கை | ஜெராக்ஸ் நகல் | **ம.த.சா.ஆ.1** |
| 1-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.2** |
| 2-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.3** |
| 3-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.4** |
| 4-ம் மனுதாரரின் ஆதார் அட்டை | உண்மை நகல் | **ம.த.சா.ஆ.5** |
| வாரிசுரிமைச் சான்று | ஜெராக்ஸ் நகல் | **ம.த.சா.ஆ.6** |

**<u>3 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இறந்துபோன சுதா என்னுடைய மனைவி ஆவார். விபத்து நடந்த 17 வருடங்களாகிறது என்றால் சரிதான் . விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான் . 2 வது மனுதாரர் தனுஸ்ரீ என்னுடைய மகள், 3 வது மனுதாரரை வெங்கடேஷ் என் மாமனார் , 4 வது மனுதாரர் இலட்சுமி என்னுடைய மாமியார் ஆவார் . என்னுடைய மகள் தனுஸ்ரீ 12 ம் வகுப்பு தற்போது படித்து வருகிறார் . நான் விவசாய வேலை செய்து வருகிறேன் , அதன் மூலம் பணம் வருகிறது , அதை வைத்து தான் குடும்ப நடத்தி வருகிறேன் என்றால் சரிதான் . 3 மற்றும் 4 மனுதாரர்கள் அவர்களுடைய வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான் . மனுதாரர்கள் நாங்கள் நான்கு பேரும் ஒரே குடும்பத்திற்கு வசித்து வருவதற்கு ரேஷன் அட்டை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன சுதா அவர்களுக்கு நானும் என் மகள் தனுஸ்ரீ மட்டும் தான் இழப்பீடு கோரமுடியும் என்றும் என் மாமனார் மற்றும் மாமியார் இழப்பீடு கோரமுடியாது என்று சொன்னால் சரிதான் . விபத்தானது குப்பம் காவல் நிலைய வரையறைக்குள் தான் நடைபெற்றது என்றால் சரிதான் . நான் குப்பம் வட்டம் , சித்தூர் மாவட்டம் , மிட்டப்பள்ளி அஞ்சல் , திம்மாவரம் கிராமத்தில் குடியிருந்து வருவதற்கான ஆவணத்தை தான் போட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

நான் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . நான் சித்தூர் மாவட்ட நீதிமன்ற வரையறைக்குள் வரும் நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல்

செய்து இருக்கவேண்டும் என்றும், இந்த நீதிமன்ற வரையறைக்குள் வராது என்றும் அதனால் இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றால் அது தவறு . விபத்து சமயத்தில் என்னுடைய மனைவி சுதா ஆட்டோவில் வரும்போது தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான் . ஆட்டோவில் 6 நபர்கள் போய்வுள்ளார் என்றால் சரிதான் . அந்த விபத்தில் என்னுடைய மனைவி சுதா மற்றும் இன்னொரு நபர் துர்கா என்பவரும் இறந்துவிட்டார் . ஒரு ஆட்டோவில் டைவருடன் சேர்ந்து மொத்த 4 நபர்கள் தான் பயணிக்க வேண்டும் என்றும், மோட்டார் வாகன சட்டத்தின்படி அதற்கு மேற்பட்ட நபர்கள் அந்த வாகனத்தில் பயணம் செய்வது தடைச்செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

என்னுடைய மனைவியும் , துர்காவும் ஆட்டோவில் சீட்டில் உட்கார்ந்து பயணம் செய்யவில்லை என்றும் , Footpath ல் பயணம் செய்த நபர்கள் என்பதால் அனுமதிக்கப்படாத பயணிகளாக பயணம் செய்துள்ளார் என்றும், ஆட்டோ உரிமையாளர் அதன் ஓட்டுநர் ரகு என்பவர் அதிக ஆட்களை ஆட்டோவில் ஏற்றி வந்ததால் வண்டியை கட்டுப்படுத்த முடியாமல் தலைகுப்புற விழுந்து ரோட்டின் ஓரம் இருந்த நீலகிரி தையல மரத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் 6 பேர்களை ஏற்றி வந்து வேகத்தை கட்டுப்படுத்தமால் ஆட்டோ குப்புற விழுந்து இந்த விபத்து ஏற்பட்டது . என் மனைவி மற்றும் மற்ற நபர்களும் அனுமதிக்கப்பட்ட நபர்களைவிட அதிகமான நபர்கள் அந்த ஆட்டோவில் பயணம் செய்ததால் அவர்களை பொறுத்தவரையில் மூன்றாம் தரப்பினர்களாக கருதமுடியாது என்றால் அது சரியல்ல.

அந்த விபத்து ஏற்படுத்தி ஆட்டோ ஓட்டுநருக்கு லைசன்ஸ் இல்லை என்றும் பர்மிட் இல்லை என்றும் , வண்டிக்கு FC இல்லை என்றும், ஆகையால் இவை அனைத்து மோட்டார் வாகன விதிகளுக்கு முரண்பட்டது என்று சொன்னால் வண்டிக்கு Documents இருப்பதாக சொன்னார்கள். 1ம் எதிர் மனுதாரர் மோட்டார் வாகன சட்டத்தை மீறியுள்ளார், Policy விதிமுறைகளும் மீறியுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எந்த நஷ்டயீடு கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றால் அது தவறு . 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார்கள் என்றால் அது தவறு . என்னுடைய மனைவின் உண்மையான வயது மற்றும் தொழில் , வருமானம் குறித்து உரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைவில் பால் வியாபாரம் செய்து வந்தார் , அது தவிர விவசாயம் செய்து வந்தார் . அதற்கான ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான் . பல்வேறு தரப்பின் கீழ் நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றும் , அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு. என்னுடைய கோரிக்கை நிராகரிக்கப்படவேண்டும் என்றால் அது தவறு. இந்த மனு 3ம் எதிர்மனுதாரர் பொறுத்தவரையில் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் அது தவறு.

<u>மறுவிசாரணை :இல்லை</u>

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:50:32 +0530